தினகனி

செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்



N.S.K
தங்கமாளிகை
தங்கம் மற்றும் வெள்ளி பொருட்களுக்கு
செய்கூலி,
சேதாரம்
இல்லை
96557 79285
98429 78833



| Vol: 02 | Issue: 49 | 4 Pages | 18.9.2024 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 49 | 4 பக்கங்கள் | 18.9.2024 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**இலர்பல ராகிய காரணம் நோற்பார்**
**சிலர்பலர் நோலா தவர்**

**விளக்கம்:**

**ஆற்றல் இல்லாதவர் பலராக உலகில் இருப்பதற்குக் காரணம் தவம் செய்கின்றவர் சிலராகவும், செய்யாதவர் பலராகவும் இருப்பதே ஆகும்.**

## பெண் டாக்டர் பலாத்கார வழக்கு; 25ந்தேதி மம்தா பானர்ஜி வீடு நோக்கி பேரணியாக செல்ல பா.ஜ.க. திட்டம்

கொல்கத்தா, செப். 18

மேற்கு வங்காளத்தின் கொல்கத்தா நகரில் ஆர்.ஜி. கார் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பணியாற்றிய 31 வயது பயிற்சி பெண் டாக்டர் ஒருவர், கடந்த மாதம் 9ந்தேதி அதிகாலையில் பலாத்காரம் செய்யப்பட்டு, பின்னர் கொடூர கொலை செய்யப்பட்டது நாடு முழுவதும் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தி உள்ளது.

இந்த சம்பவத்தில் சஞ்சய் ராய் என்பவர் கைது செய்யப்பட்டு உள்ளார். இந்த வழக்கை போலீசார் விசாரித்த நிலையில், கொல்கத்தா ஐகோர்ட்டு உத்தரவையடுத்து, சி.பி.ஐ. விசாரணை மேற்கொண்டு வருகிறது. இந்த விவகாரத்தில், டாக்டர்களுக்கு பாதுகாப்பு கோரியும், பெண் டாக்டருக்கு நீதி வேண்டும் என கோரியும், சம்பவ நாளில் இருந்து கொல்கத்தா நகரில் டாக்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.


இந்நிலையில், இந்த வழக்கில், ஆர்.ஜி. கார் மருத்துவக்கல்லூரியின் முன்னாள் முதல்வரான சந்தீப் கோஷ் மற்றும் தாலா காவல் நிலைய பொறுப்பு அதிகாரியான அபிஜித் மொண்டல் ஆகியோரை சி.பி.ஐ. கைது செய்துள்ளது. இதனால் வழக்கில் திடீர் திருப்பம் ஏற்பட்டு உள்ளது.

இந்நிலையில், மத்திய மந்திரி மற்றும் பா.ஜ.க. மூத்த தலைவரான சுகந்த மஜும்தார் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறும்போது, கட்சி தொண்டர்கள் நாளை முதல் தெருமுனைகளில் போராட்டம் நடத்துவார்கள். வருகிற 25 ந்தேதி, முதல்மந்திரியின் வீடு நோக்கி பேரணியாக செல்ல திட்டமிடப்பட்டு உள்ளது.

இதேபோன்று, வருகிற 23ந்தேதி எங்களுடைய மகளிரணியினர், துடைப்பம் மற்றும் கங்கை நீரை எடுத்து கொண்டு சென்று, சில தேர்ந்தெடுக்கப்பட்ட, தூய்மையற்ற காவல் நிலையங்களை தூய்மை செய்வார்கள் என கூறியுள்ளார்.

மேற்கு வங்காள சட்டசபையின் எதிர்க்கட்சி தலைவரான சுவேந்து அதிகாரி கூறும்போது, முதல்மந்திரி மம்தா பானர்ஜி பதவி விலக வலியுறுத்தி அவருடைய வீடு அருகே 25ந்தேதி பேரணி ஒன்றை நடத்துவோம் என கூறினார். இதில், 25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வரையிலான தொண்டர்கள் பங்கேற்பார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

## இந்தியாவின் கடல்சார் வளர்ச்சியில் புதிய அத்தியாயத்தை எழுத வ.உ.சி. துறைமுகம் தயாராக உள்ளது பிரதமர் மோடி



புதுடெல்லி, செப். 18

தூத்துக்குடி துறைமுகத்தில் புதிய சர்வதேச பெட்டக முனையத்தை திறந்து வைத்து பிரதமர் மோடி பேசியதாவது:

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதில் தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகள் முக்கிய பங்காற்றியுள்ளது. மூன்று பெரிய துறைமுகங்கள் மற்றும் பதினேழு சிறு துறைமுகங்களுடன், தமிழ்நாடு கடல்சார் வர்த்தகத்தின் முக்கிய மையமாக மாறியுள்ளது.

துறைமுகம் சார்ந்த வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்க, வெளி துறைமுக சரக்குப் பெட்டக முனையத்தை உருவாக்க, இந்தியா ரூ. 7,000 கோடிக்கு மேல் முதலீடு செய்கிறது. வ.உ.சி துறைமுகத்தின் திறன் தொடர்ந்து வளர்ந்து வருகிறது. இந்தியாவின் கடல்சார் வளர்ச்சியில் புதிய அத்தியாயத்தை எழுத வ.உ.சி துறைமுகம் தயாராக உள்ளது.

வ.உ.சி துறைமுகம் ஒரு பசுமை ஹைட்ரஜன் மையமாகவும், கடல் காற்றாலை மின்சக்திக்கான நோடல் துறைமுகமாகவும் அங்கீகரிக்கப்படுகிறது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தமிழக துறைமுகங்கள் முக்கிய பங்காற்றியுள்ளன. தூத்துக்குடி சர்வதேச கொள்கலன் முனையம் இந்தியாவின் கடல் உள்கட்டமைப்பின் நட்சத்திரமாகும். இவ்வாறு அவர் கூறினார்.

## கனடாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.5 ஆக பதிவு

ஒட்டவா, செப். 18

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்தநிலநடுக்கம்ரிக்டர்அளவில்6.5ஆகபதிவாகியுள்ளது. போர்ட் மெக்நீல் கடலோர பகுதிகளில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் அங்குள்ள கட்டிடங்கள் குலுங்கின. இதனால் மக்கள் பீதி அடைந்தனர். நிலநடுக்கத்தை தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை.

## நைஜீரியாவில் படகு கவிழ்ந்தது; விவசாயிகள் 64 பேர் பலியான சோகம்

லாகோஸ், செப். 18

வடமேற்கு நைஜீரியாவில் ஜம்பாரா மாநில விவசாயிகள் தங்களுடைய விவசாய பணிகளுக்காக தினந்தோறும் ஆற்றினை கடந்து செல்கிறார்கள். அந்த வகையில் 70 பேர் படகில் சென்ற போது திடீரென ஆற்றில் கவிழ்ந்தது. இதில் விவசாயிகள் 64 பேர் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். 6 பேர் பத்திரமாக மீட்கப்பட்டனர். இந்த விபத்து அந்த நாட்டில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக மீட்புக்குழு அதிகாரிகள் கூறுகையில், "70 விவசாயிகளை ஏற்றிச் சென்ற மரப் படகு விபத்தில் சிக்கியது. மீட்பு பணிகளுக்கு உள்ளூர் மக்கள் உதவினர். 3 மணி நேரமாக போராடி 6 பேரை தான் மீட்க முடிந்தது. 900க்கும் மேற்பட்ட விவசாயிகள் தங்கள் விவசாய நிலங்களை அணுகுவதற்கு தினமும் ஆற்றைக் கடந்துதான் செல்கிறார்கள். ஆனால் வெறும் இரண்டு படகுகள் மட்டுமே உள்ளதால், அதிக அளவில் ஆட்களை படகில் ஏற்றி செல்கிறார்கள். இது கூட்ட நெரிசலுக்கு வழிவகுக்கிறது" என்றார்.

# ராணிப்பேட்டையில் கார் உற்பத்தி ஆலை 28ம் தேதி அடிக்கல் நாட்டுகிறார் முதல்வர்

சென்னை, செப். 18

ராணிப்பேட்டை மாவட்டம் பனப்பாக்கத்தில் அமைய உள்ள ஜாகுவார், லேண்ட் ரோவர் கார் உற்பத்தி ஆலைக்கு வருகிற 28 ந்தேதி முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்ட உள்ளார். ஜாகுவார், லேண்ட் ரோவர் கார் உற்பத்தி ஆலை பனப்பாக்கத்தில் 400 ஏக்கரில் ரூ.9,000 கோடி மதிப்பீட்டில் டாடா மோட்டார்ஸ் அமைக்க உள்ளது. கார் உற்பத்தி ஆலையின் மூலம் 5,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.



அதைபோல பனப்பாக்கத்தில் 250 ஏக்கர் பரப்பளவில் ரூ.400 கோடி மதிப்பில் அமைய உள்ள மெகா காலணி உற்பத்தி ஆலைக்கும் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டுகிறார். இந்த மெகா காலணி உற்பத்தி பூங்காவின் மூலம் 20 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராணிப்பேட்டை மாவட்டத்தில் தோல் மற்றும் காலணி உற்பத்தி சிறந்து விளங்குகிறது. அதை சர்வதேச தரத்தில் உயர்த்தி அதிக வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் இந்த மெகா காலணி உற்பத்தி ஆலை அமைக்கப்பட உள்ளது.

## த.வெ.க. மாநாட்டை அக்டோபர் 3வது வாரத்தில் நடத்த திட்டம்?

சென்னை, செப். 18

தமிழ் திரையுலகின் முன்னணி நடிகர் விஜய், கடந்த பிப்ரவரி மாதம் தமிழக வெற்றிக் கழகம் என்ற அரசியல் கட்சியை தொடங்கினார். இதையடுத்து கடந்த ஆகஸ்டு 22ந்தேதி கட்சியின் கொடியை நடிகர் விஜய் அறிமுகப்படுத்தி, முதல் மாநாட்டில் கட்சியின் கொள்கை, கொடியின் விளக்கம், கட்சியின் நிலைப்பாடுகள் குறித்து விளக்குவதாக அறிவித்தார். இது விஜய் கட்சியின் தொண்டர்கள் மற்றும் ரசிகர்களிடம் உற்சாகத்தை ஏற்படுத்தியது.

இதைத்தொடர்ந்து சேலம், திருச்சி உள்ளிட்ட சில இடங்களில் கட்சியின் மூத்த நிர்வாகிகள் மாநாடு நடத்துவதற்கான இடத்தை பார்வையிட்டனர். இதையடுத்து விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வி.சாலையில் மாநாடு நடத்த இடம் தேர்வு செய்யப்பட்டது. ஆனால் அதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு இதுவரை அறிவிக்கப்படவில்லை.

அதனை தொடர்ந்து வருகிற 23ந்தேதி மாநாடு நடத்துவதற்கு பாதுகாப்பு அளித்திட அனுமதி கேட்டு விழுப்புரம் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகம் மற்றும் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மனு அளிக்கப்பட்டது. இதையடுத்து 33 நிபந்தனைகளுடன் மாநாட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இதற்கிடையில் முதல் மாநாட்டை மிக பிரமாண்டமாக நடத்த பல்வேறு கெடுபிடி போடப்பட்டதால், அதற்கான பணிகள் தொடங்காமல் உள்ளது. மேலும் 23 ந்தேதி திட்டமிட்டபடி மாநாடு நடைபெறுமா? என்ற சூழல் உருவாகியுள்ளது.



இந்த நிலையில், நடிகர் விஜய்யின் ஜாதகப்படி மாநாட்டை அக்டோபர் மாதம் 20ந்தேதி முதல் 27ந்தேதிக்குள் நடத்தலாம் என ஜோதிடர் ஆலோசனை வழங்கியதாக தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி, தமிழக வெற்றிக்கழகத்தின் முதல் மாநாட்டை அக்டோபர் 3வது வாரத்தில் நடத்த கட்சியினர் திட்டமிட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. மாநாட்டுக்கு அனுமதி கேட்டு மீண்டும் காவல்துறையிடம் கடிதம் வழங்கவும் தவெக திட்டமிட்டுள்ளது.

## த.வெ.க. சார்பில் திருக்கோவிலூரில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழா



விழுப்புரம், செப். 18

தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் சார்பில் மாநில தலைவர் புஸ்ஸி ஆனந்த Ex MLA. உத்தரவின் படி கள்ளக்குறிச்சி மாவட்ட தலைவர் மற்றும் விழுப்புரம் மாவட்டம் பொறுப்பாளர் பரணி பாலாஜி தலைமையில் திருக்கோவிலூர் ஒன்றிய தலைவர் மணி மாறன், முகையூர் ஒன்றிய தலைவர் வெங்கடேசன் முன்னிலையில் தந்தை பெரியார் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருக்கோவிலூர் நகராட்சியில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் திருக்கோவிலூர் நகர செயலாளர் தர்மராஜ், முகையூர் ஒன்றிய செயலாளர் முருகன், திருக்கோவிலூர் ஒன்றிய செயலாளர் முருகன், ஒன்றிய பொருளாளர் ராஜேஷ், முகையூர்பொருளாளர் சிவக்குமார், முகையூர் மகளீர் ஒன்றிய அணி தலைவி சுமத்ரா திருக்கோவிலூர் மற்றும் முகையூர் நிர்வாகிகள் பங்கேற்றனர்.



பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் பிறந்த நாள் விழா 146 வது பிறந்தநாள் விழா விழுப்புரம் மாவட்ட தமிழக வெற்றி கழகம் சார்பில் கொண்டாடப்பட்டது இதில் மாவட்ட தலைவர் N..குஷி மோகன் மாவட்டத் துணைத் தலைவர் வடிவேல் மாவட்ட இளைஞரணி G.P சுரேஷ் தலைமையில் ஊர்வலமாக சென்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்

## புதுச்சேரி மாநில மக்கள் முன்னேற்றக் கழகம் சார்பில் புதுவையில் உள்ளாட்சி தேர்தலை நடத்த கோரி இரண்டாம் கட்ட போராட்டம்



புதுச்சேரி, செப். 18

புதுச்சேரி மாநில மக்கள் முன்னேற்றக் கழகம் சார்பில் புதுவையில் உள்ளாட்சி தேர்தலை நடத்த கோரி இரண்டாம் கட்ட போராட்டம் அரியாங்குப்பத்தில் நடைபெற்றது.

புதுச்சேரி மாநில மக்கள் முன்னேற்றக் கழகம் சார்பில் உள்ளாட்சித் தேர்தலை உடனடியாக நடத்த கோரி அரசை வலியுறுத்தி தொடர் போராட்டம் நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது. அதன் படி முதல் கட்ட போராட்டம் உழவர்கரை நகராட்சி எதிரில் நடைபெற்றது. அதனை தொடர்ந்து இரண்டாம் கட்ட போராட்டம்

அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்து அலுவலகத்தின் எதிரில் வீராம்பட்டினம் செல்லும் சந்திப்பில் மெயின் ரோட்டில் உள்ள பிரம்மன் கோயில் அருகில் 17.9.2024 செவ்வாய்க்கிழமை காலை 10 .00 மணிக்கு நடைபெற்றது. அதற்கு முன்பாக அரியாங்குப்பம் பைபாஸ் சிக்னல் அருகில் உள்ள முக்கிய சாலை சந்திப்பில் கழக கொடியேற்று விழா நடைப்பெற்றது. முன்னதாக மாநில செயலாளர் சிவகுமாரன் தலைமையில் கழக தொண்டர்கள் இருசக்கர வாகனத்தில் கொடியேற்று விழாவிற்கு வந்தடைந்தனர். கழகத்தலைவர் பேராசிரியர் மு.ராமதாஸ் அவர்கள் கட்சி கொடியை ஏற்றி வைத்து அனைவருக்கும் இனிப்பு வழங்கினார்.

அதனை தொடர்ந்து மேடையை நோக்கி ஊர்வலமாக கழக தொண்டர்கள் புடை சூழ போராட்ட மேடைக்கு வந்தடைந்தனர்.

போராட்ட களத்தில் இணைப்பு உரையை மாநில பொருளாளர் பெண்ணியம் செல்வகுமாரி வழங்கி, விழிப்புணர்வுக் கோஷங்கள் எழுப்பினார். போராட்டத்திற்கு மாநில இணை செயலாளர் G.D. இளங்கோவன் தலைமை தாங்கினார். மாநில துணைச் செயலாளர் கலியப்பெருமாள், உதவி செயலாளர் இதய வேந்தன், மாநில மீனவர் அணி தலைவர் சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வந்தவர்கள் அனைவரையும் மாநில மகளிர் அணி தலைவர் திருமதி விமலா பெரியாண்டி வரவேற்றார்.

கழகத்தின் சேர்மன் RL வெங்கட்ராமன் மற்றும் மாநில பொது செயலாளர் பேராசிரியர் எ.மு.ராஜன் ஆகியோர் நோக்க உரை ஆற்றினார்கள்.

கழகத் தலைவர் பேராசிரியர் மு.ராமதாஸ் அவர்கள் போராட்டத்தை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்கள். முன்னாள் பஞ்சாயத்து தலைவர் ஜெகநாதன், தனஞ்செயன், சந்திரன், கண்டனஉரை ஆற்றினார்கள். மற்றும் கூட்டத்தில் மாநில செயலாளர்கள் பரந்தாமன், ரவிகுமார், மோகனசுந்தரம், துணை செயலாளர் சுப்ரமணியன்மாநில உதவி செயலாளர் ஆண்டாள் சிறுபான்மை அணி தலைவர் ரஞ்சித்குமார் ,சுப்ரமணி, பீட்டர், கோமதி சுலோச்சனா கௌரி, தேவராசு , மற்றும் ஏராளமான பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.மாநில உதவி செயலாளர் விஜயகுமார் போராட்டத்திற்கு வந்து சிறப்பித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

தினகனி



# காசோலையில் கையெழுத்திடும் அதிகாரம் பறித்த ஆணை ரத்து



சென்னை, செப். 18

கோவை மாவட்டம் சோமயம் பாளையம் உள்ளிட்ட 3 ஊராட்சி மன்றங்களின் தலைவர்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி இழப்புகளை ஏற்படுத்தியதாக குற்றம்சாட்டி, அவர்கள் காசோலையில் கையெழுத்திடும் அதிகாரத்தை ரத்து செய்து மாவட்ட கலெக்டர் உத்தரவு பிறப்பித்தார். இந்த உத்தரவை எதிர்த்து 3 ஊராட்சித் தலைவர்களும் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர், ராஜசேகர் அமர்வு முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழ்நாடு பஞ்சாயத்து ராஜ் சட்டப்படி ஊராட்சிகளில் பணிகளை நிறைவேற்றும் வகையில் காசோலையில் கையெழுத்திட தலைவரோ, துணைத் தலைவரோ மறுக்கும் பட்சத்தில், அந்த திட்டத்தை நிறைவேற்ற, காசோலையில் கையெழுத்திடும் அதிகாரத்தை ரத்து செய்ய மாவட்ட கலெக்டருக்கு அதிகாரம் உள்ளது" என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

அதே சமயம் தவறான நிர்வாகம், நிதி முறைகேடு போன்ற குற்றச்சாட்டுகளுக்காக காசோலையில் கையெழுத்திடும் அதிகாரத்தை ரத்து செய்யும் சட்டப் பிரிவை பயன்படுத்த முடியாது என்று தெரிவித்த நீதிபதிகள், ஊராட்சித் தலைவர்களின் விளக்கத்தை கேட்காமல் காசோலை அதிகாரம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

ஆகவே, மாவட்ட கலெக்டரின் உத்தரவுகளை ரத்து செய்கிறோம் என்று நீதிபதிகள் தெரிவித்தனர். மேலும், கோவை மாவட்டத்தைச் சேர்ந்த 3 ஊராட்சித் தலைவர்களின் வழக்குகளில், சட்டப்படி உரிய நடைமுறைகளை பின்பற்றி புதிய நடவடிக்கை எடுக்க தமிழக அரசுக்கு சென்னை ஐகோர்ட்டு அனுமதி அளித்துள்ளது.

# தமிழ்நாட்டின் சமூக அரசியல் சூழலை தி.மு.க. மாற்றியமைத்துள்ளது: கனிமொழி எம்.பி.




சென்னை, செப். 18

அண்ணா பிறந்தநாள் (செப்.15), பெரியார் பிறந்தநாள் (செப்.17), திமுக தொடங்கிய நாள் (செப்.17)எனமூன்றையும் இணைந்து ஆண்டுதோறும் முப்பெரும் விழாவை திமுக நடத்தி வருகிறது. இந்த ஆண்டு திமுக தொடங்கப்பட்டு 75வது ஆண்டு என்பதால் மிகச் சிறப்பாக கொண்டாட தமிழ்நாடு முதல்அமைச்சரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் முடிவெடுத்துள்ளார். அந்த வகையில் இந்த ஆண்டு நாளை (செப். 17) சென்னை, நந்தனம் ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் திமுக முப்பெரும் விழா நடைபெறுகிறது.

குறிப்பாக, திமுகவின் முப்பெரும் விழாவில் கட்சியில் சிறப்பாக பணியாற்றுபவர்களை அடையாளம் காட்டும் விதமாக, 1985ம் ஆண்டு முதல் விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, இந்த ஆண்டிற்கான விருது பெறுபவர்களும் அறிவிக்கப்பட்டனர். பவளவிழா ஆண்டை குறிக்கும் விதத்தில் 75 ஆயிரம் பேர் அமரும் வகையில் அரங்கு அமைக்கப்படுகிறது. அமைச்சர்கள், சட்ட மன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள், நிர்வாகிகள், கட்சி நிர்வாகிகள் என அனைவருக்கும் தனித்தனியே பார்க்கிங் வசதிகளும் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், திமுக துணைப் பொதுச்செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி தனது எக்ஸ் பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த பதிவில், திமுகவின் தோற்றம் தமிழ்ச் சமூகத்தின் முன்னேற்றத்தில் ஒரு தீர்க்கமான தருணத்தைக் குறிக்கிறது. மூடநம்பிக்கைகளும், மதவாதமும் பெரும்பான்மையினரை ஒடுக்கிய காலத்தில், விளிம்புநிலை மக்களின் வலிமையான குரலாக திமுக உருவெடுத்தது. சோசலிசம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய நிர்வாகத்திற்கான அதன் அர்ப்பணிப்பு வளர்ச்சி அனைத்து பகுதிகளையும் சமூகங்களையும் தொடுவதை உறுதி செய்தது.

பெரிய அளவிலான அணிதிரட்டல் மூலம், இந்த இயக்கம் தமிழ்நாடு முழுவதும் பரவியது. நீண்ட காலமாக விதி மற்றும் பிறப்பின் நம்பிக்கைகளால் கட்டுப்படுத்தப்பட்டவர்களுக்கு சமூக நீதி, மொழிவாரி உரிமைகள் மற்றும் மாநில சுயாட்சிக்காக போராட அதிகாரம் அளித்தது. கடந்த 75 ஆண்டுகளில், பெண்களுக்கான சொத்துரிமையைப் பாதுகாப்பது முதல் கல்வி தொழில்துறை, சுகாதாரம் மற்றும் மனித மேம்பாட்டுக் குறியீடு ஆகியவற்றில் தமிழகத்தை முன்னணியில் நிலைநிறுத்துவது வரை திமுக குறிப்பிடத்தக்க மைல்கற்களை எட்டியுள்ளது இந்தியா. திராவிட சித்தாந்தத்தை தழுவியதன் மூலம், தமிழ்நாட்டின் சமூக அரசியல் சூழலை திமுக மாற்றியமைத்துள்ளது என பதிவிட்டுள்ளார்.

# பவுர்ணமியை முன்னிட்டு திருவண்ணாமலைக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கம்



சென்னை, செப்ற். 18

பவுர்ணமியை முன்னிட்டு திருவண்ணாமலைக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மூலம் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளதாக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

17092024 (செவ்வாய்கிழமை) பவுர்ணமியை முன்னிட்டு சென்னையிலிருந்து திருவண்ணாமலை க்கும் மற்றும் பல்வேறு இடங்களிலிருந்து திருவண்ணாமலைக்கும் கூடுதலான பயணிகள் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. 17092024 அன்று சென்னை கிளாம்பா க்கத்திலிருந்து 300 பேருந்துகளும், கோயம்பேட்டிலிருந்து 15 பேருந்துகளும். மாதாவரத்திலிருந்து தினசரி இயக்ககூடிய பேருந்துகளுடன் 30 பேருந்துகளும் கூடுதலாக இயக்கப்படும்.

மேலும், பல்வேறு இடங்களிலிருந்து திருவண்ணாமலைக்கு 17092024 அன்று 175 பேருந்துகள் தினசரி இயக்ககூடிய பேருந்துகளுடன் கூடுதலாக இயக்கப்படும். அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக இருக்கை மற்றும் படுக்கை வசதி கொண்ட குளிர்சாதனம் கொண்ட 30 பேருந்துகள் சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலைக்கு 17092024 அன்று இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், திருநெல்வேலி. நாகர்கோவில், தென்காசி, தூத்துக்குடி மற்றும் ஒசூர் ஆகிய இடங்களிலிருந்து திருவண்ணாமலைக்கு அரசு பேருந்துகளில் முன்பதிவு செய்து பயணிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பயணிகள் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தங்களது பயணத்திற்கு www.tnstc.in மற்றும் Mobile App மூலம் முன்பதிவு செய்து பயணிக்க கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். இச்சிறப்பு பேருந்து இயக்கத்தினை கண்காணிக்க அனைத்து பேருந்து நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்ப ட்டுள்ளனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விழுப்புரம் அருகே மாதா கோவில் இடித்து அகற்றம் கதறி அழுத பெண்கள்



விழுப்புரம், செப். 18

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் அருகே உள்ள பருகம்பட்டு கிராமத்தில் நீர்நிலை ஆக்கிரமிப்புகள் இருப்பதாக புகார் எழுந்தது. குறிப்பாக அங்குள்ள ராகவன் வாய்க்காலில் ஆக்கிரமிப்புகள் இருந்ததாக கூறப்படுகிறது.

இந்த ராகவன் வாய்க்காலில் இருந்து திருநாவலூர் ஏரிக்கு செல்லும் கிளை வாய்க்கால் கரையின் மீது கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு சிறிய அளவிலான மாதா கோவிலை கிராம மக்கள் கட்டி வழிபட்டார்கள். இந்நிலையில் ராகவன் வாய்க்கால் ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரி சென்னை ஐகோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டது. அந்த வழக்கை விசாரித்த சென்னை ஐகோர்ட்டு, ராகவன் வாய்க்காலை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள சிறிய அளவிலான மாதா கோவிலை இடித்து அகற்றி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என விழுப்புரம் மாவட்ட நிர்வாகத்துக்கு உத்தரவிட்டது.

இதனையடுத்து பருகம்பட்டு மாதா கோவிலை இடித்து அகற்றுவதற்கான நடவடிக்கையில் இன்று வருவாய் துறை அதிகாரிகள் ஈடுபட்டார்கள். அப்போது, மாதா கோவிலை இடிக்க கிராம மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். அப்போது கிராமத்தைச் சேர்ந்த சுமார் 200க்கும் மேற்பட்டோர் போலீசாருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்கள். அப்போது மாதா கோவிலை இடிக்க விடாமல் சிலர் தற்கொலை மிரட்டல் விடுத்தனர். இதனால் ஊர்மக்களுக்கும் போலீசாருக்கும் இடையே திடீரென தள்ளு முள்ளு ஏற்பட்டது.

அதன்பிறகு மேல்புறத்தில் வைக்கப்பட்டிருந்த மாதா சிலையை அகற்றிய போது அங்கிருந்த பெண்கள் கதறி அழுதனர். ஒரு கட்டத்தில் மாதா கோவிலை இடிக்க முற்பட்டபோது போராட்டத்தில் ஈடுபட்ட பெண் ஒருவர் மயங்கி விழுந்தார். இதையடுத்து ஆம்புலன்ஸ் மூலம் அவர் மருத்துவமனைக்குஅழைத்துச் செல்லப்பட்டார். பலத்த போராட்டத்திற்கு நடுவே மாதா கோவில் இடித்து அகற்றப்பட்டது. இந்த சம்பவத்தால் கடலூர் சித்தூர் தேசிய நெடுஞ்சாலையில் மறியல் போராட்டமும், பதற்றமும் நீடித்தது.

# ஸ்ரீரங்கத்தில் ஆண்டுக்கு 7 முறை நெல் அளவைத் திருநாள்



ஸ்ரீரங்கம், செப். 18

நெல் அளவைக்கு உத்தரவு கிடைத்ததும் திருவரங்கம் என சொல்லி முதல் மரக்கால் நெல்லை அளந்து போடுவது வழக்கம்.

ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலில் சித்திரை, வைகாசி, ஆவணி, ஐப்பசி, தை ,மாசி மற்றும் பங்குனி என ஏழு மாதங்களில் நெல் அளவை திருநாள் நடைபெறும். மக்கள் அனைவருக்கும் பகவான் படி அளப்பதை நினைவுபடுத்தும் வகையில் இந்த சிறப்பு வைபவம் நடத்தப்படுகிறது. அவ்வகையில் ஆவணி மாத நெல் அளவை திருநாள் வரும் 20ம் தேதி நடக்கிறது. பவித்ரோற்சவத்தின் 7ம் நாளான அன்றைய தினம், நம்பெருமாள் உபய நாச்சியார்களுடன் கோவில் கொட்டாரத்தில் நெல் அளவை கண்டருளுகிறார்.

நெல் அளவைத் திருநாள் அன்று கருவறையில் இருந்து ஸ்ரீதேவி பூதேவி துணைவராகக் கிளம்புகிறார் நம்பெருமாள். இந்தப் பட்டத்துக்கு தானிய வரவு எவ்வளவு? செலவு எவ்வளவு? மீதி இருப்பு எவ்வளவு? என்று கணக்கிட்டுப் பார்ப்பதற்காக நம்பெருமாள் புறப்படுவார். கணவரின் சரிபாதியாக மனைவி கருதப்படுகிறாள். எனவே, மனைவிக்கு எல்லா விஷயமும் தெரிந்திருக்க வேண்டும், தம்பதிகளிடையே எந்த ஒளிவு மறைவும் கூடாது என்று மக்களுக்கு உணர்த்துவதற்காக தேவியர் இருவரையும் உடன் அழைத்து வருகிறார் நம்பெருமாள். இதுதவிர, தானிய அளவையின்போது தானிய லட்சுமி துணை வரவேண்டும் என்பதும் முக்கியம்.

பட்டு வேஷ்டி, அங்க வஸ்திரம் அணிந்து ஸ்ரீதேவி பூதேவியர் பட்டாடை உடுத்தி உடன் வர, பக்தர்கள் புடைசூழ வெளிப்பிரகாரமான ராஜமகேந்திரன் திருச்சுற்றில் பவனி வருவார் நம்பெருமாள். ஆரியபட்டாள் வாசல் வழியே வந்து செங்கமலத் தாயார் சன்னிதி எனப்படும் திருக்கொட்டாரம் முன்பு நாலு கால் மண்டபத்தில் எழுந்தருள்வார். அப்போது பாசிப்பயறும் பானகமும் நைவேத்தியமாகப் படைக்கப்படும். செங்கமலத் தாயார் சன்னிதி பூஜை பரிச்சாரகம் செய்பவர் ஒரு தட்டில் வெற்றிலைப் பாக்கு வைத்து நம் பெருமாளை எதிர் சென்று வணங்கி வரவேற்பார். அவருக்கு மரியாதை செய்யப்படும்.

பின்னர், பெருமாள் அருகில் இருக்கும் ஸ்தானிகர் அருளிப்பாடி, கார் அளப்பான் எனப்படும் அளவைக்காரரைஅழைப்பார். ஸ்தானிகர் குரல் கேட்டு, 'ஆயிந்தேன் ஆயிந்தேன்' எனச் சொல்லி விரைந்து சென்று பெருமாள் முன்பு மிகப் பணிவாக நிற்பார் அளவைக்காரர். அவருக்கு தீர்த்தம், சந்தனம், மஞ்சள்பொடி அளித்து பரிவட்டம் கட்டி சடாரி சாத்தி மரியாதை செய்யப்படும். பெருமாளின் பாதமான சடாரி சாத்தினாலே அளவைக்காரருக்கு உத்தரவு வந்துவிட்டது என்று பொருள். சடாரி சாத்தியதும் அளவைக்காரார் பித்தளை மரக்கால் கொண்டு தானியத்தை அளக்கத் தொடங்குவார்.

முதலில், திருவரங்கம் என சொல்லி முதல் மரக்கால் நெல்லை அளந்து போடுவது வழக்கம். அடுத்து பெரிய கோவில் எனக்கூறி இரண்டாவது மரக்கால் நெல்லை அளந்து போடுவார். அதன் பின்னர் வரிசையாக மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு என அளக்கப்படும். ஒன்பது என அளக்கும்போது எங்கிருந்தோ அசரீரியாக ஒரு குரல் கேட்கும். 'நிரவி விட்டு அள' என்று ஸ்தானிகர்தான் குரல் கொடுப்பார்.

இதன்மூலம், 'சரியாக அளந்து போடு' என்று பெருமாளே கட்டளையிடுவதாக ஐதீகம். தனது நேரடிப் பார்வையில் நெல் அளவை கண்டபின் நம்பெருமாள் ஸ்ரீதேவி பூதேவியுடன் இணைந்து பூந்தேரில் எழுந்தருளி வீதி உலா வருவார்.

# வளத்தி ஊராட்சியில் பெரியார் பிறந்த நாள் விழா முன்னிட்டு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் தலைமையில் திமுக நிர்வாகிகள் சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்பு




வளத்தி செப்.18

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின்146வதுபிறந்தநாளை முன்னிட்டு,அமைச்சர் செஞ்சிமஸ்தான் ஆலோசனைப்படி, விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம்,வளத்தி ஊராட்சியில் அவருடைய திருவுருவ படத்திற்கு மேல்மலையனூர் ஒன்றிய திமுக செயலாளர் L.P.நெடுஞ்செழியன் லைமையில் திமுக நிர்வாகிகளுடன் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்,

இதன் பின்னர் சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்கள்.

# கடலூர் மாவட்டத்தில் எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியார் உருவச்சிலைக்கு அமைச்சர் மாலை அணிவித்து மரியாதை



கடலூர், செப். 18

கடலூர் மாவட்டம் எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியார் 107 வது பிறந்த நாளினை முன்னிட்டு கடலூர் மாவட்டம் மஞ்சக்குப்பத்தில் அமைந்துள்ள திரு.எஸ். எஸ்.இராமசாமி படையாட்சியார் மணிமண்டபத்தில், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர்ளம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மாவட்ட கலெக் டர் சிபி ஆதித்யா செந்தில் குமார், கடலூர் மாநகர மேயர் சுந்தரிராஜா, துணை மேயர் பா.தாமரைச் செல்வன். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா. இராஜாராம், மாநகராட்சி ஆணையாரளர் எஸ்.அனு ஆகியோர் அண்ணாரது திருவுருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியார் 1918ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16ஆம் நாள் பிறந்தார். இளம் வயதிலேயே சமுதாயப் பணிகளில் நாட்டம் கொண்டிருந்தார். மேலும் இந்திய விடுதலைப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, நாடு விடுதலை பெற அரும்பாடுபட்டவர். நாடு விடுதலை அடைந்த பின்னர், 1952ஆம் ஆண்டு தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி என்ற ஒரு கட்சியை எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியார் அவர்கள் துவக்கினார். 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், இவரது உழைப்பாளர் கட்சியின் சார்பாக போட்டியிட்ட 19 வேட்பாளர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் நலனிலும், முன்னேற்றத்திலும் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்ட எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியார், 1954 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரை பெருந்தலைவர் காமராசர் அவர்களது அமைச்சரவையில் அமைச்சராகப் பணிபுரிந்தவர். 1980 மற்றும் 1984ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்களில் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினராகவும் மக்கள் பணியாற்றினார்.

ஏழை, எளிய மக்கள் கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் தங்களது உரிமையைப் பெற்று வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில், எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியார் மிகவும் சமயோசிதமாகவும் அதே நேரம் தன் கருத்தை ஆணித்தரமாகவும் பேசுவதில் வல்லவராக திகழ்ந்தார். எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியார் பெருமைக்கும், புகழுக்கும் சிறப்பு சேர்க்கும் வகையில், ஆற்றிய பணிகளை சிறப்பிக்கும் வகையில் அண்ணாரின் பிறந்த நாளினை அரசு விழாவாக ஆண்டு தோறும் கொண்டாடப் பட்டு வருகிறது.

# வீட்டில் விளக்கேற்றிய பெண்ணுக்கு நேர்ந்த சோகம்

அரியலூர், செப் . 18

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம்அருகே உள்ள கரடிகுளம் கிராமம் வாண்டையார் தெருவை சேர்ந்தவர் அப்பாதுரை. இவரது மகள் ஷோபனா. சம்பவத்தன்று ஷோபனா வீட்டில் விளக்கு ஏற்றியுள்ளார். அப்போது அவரது சேலையில் தீப்பிடித்து, உடல் முழுவதும் பரவியது. இதனால் ஷோபனா அலறி துடித்துள்ளார். அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் அங்கு ஓடிவந்து தீயை அணைத்து ஷோபனாவை மீட்டு, ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு, மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் ஷோபனா அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி அவர் பரிதாபமாக உயிரிழந்தார். இது குறித்து ஜெயங்கொண்டம் போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர். வீட்டில் விளக்கேற்றியபோது சேலையில் தீப்பிடித்து பெண் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.




மதுரை கே புதூர் விஸ்வகர்மா ஜெயந்தி விழா மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது இதில் விஸ்வகர்மா நிர்வாகிகள் மற்றும் அனைத்து நிர்வாகிகளும் திரளாக கலந்து கொண்டு கொடியேற்றத்துடன் ஜெயந்தி விழா கொண்டாடப்பட்டது

# மாற்றுத் திறனாளிகளின் கோரிக்கைகளை தி.மு.க. அரசு நிறைவேற்றவில்லை: ஓ.பன்னீர் செல்வம் கண்டனம்

சென்னை, செப். 18

முன்னாள்முதல்அமைச்சர் ஓ. பன்னீர் செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கடந்த மூன்று ஆண்டு தி.மு.க. ஆட்சியில், விவசாய பெருங்குடி மக்கள், தொழிலதிபர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், வணிகர்கள், இளைஞர்கள், மாணவமாணவியர் என அனைத்துத் தரப்பினரும் வேதனையில் ஆழ்ந்துள்ள நிலையில், மாற்றுத் திறனாளிகளும் தங்களை தி.மு.க. அரசு புறக்கணிப்பதாக கூறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது மிகுந்த வேதனை அளிக்கும் செயல் ஆகும்.

மாற்றுத் திறனாளிகளுக்காக பல்வேறு அரசாணைகளை வெளியிட்டுள்ள தி.மு.க அரசு, எந்தவொரு ஆணையையும் செயல்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டினை தமிழக மாற்றுத் திறனாளிகள் சட்டப் பாதுகாப்பு இயக்கத்தினர் தெரிவிக்கின்றனர். அரசு வளாகங்களில் ஆவின் பாலகம் அமைக்க இடம் ஒதுக்குவது, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வணிக வளாகங்கள் மற்றும் சிட்கோ தொழிற்பேட்டைகளில் ஐந்து விழுக்காடு இடம் ஒதுக்குவது. சாலையோரங்களில் தள்ளுவண்டி வாயிலாக தொழில் செய்ய உதவுவது, மாதாந்திர உதவித் தொகையை மூவாயிரம் ரூபாயாக உயர்த்துவது. பகுதி நேர மாற்றுத் திறனாளி ஆசிரியர்களை நிரந்தரம் செய்வது உள்ளிட்ட அனைத்து அரசாணைகளையும் தி.மு.க அரசு செயல்படுத்தவில்லை என்றும், கடந்த ஆட்சியின் போது போராடிய மாற்றுத் திறனாளி சங்க நிர்வாகிகளை மாற்றுத் திறனாளி நலத் துறையின் உறுப்பினர்களாக்கி தி.மு.க. அரசு வஞ்சிப்பதாகவும், இந்த நிலை நீடித்தால் அனைத்து சங்கங்களுடன் இணைந்து போராடுவோம் என்றும் தமிழக மாற்றுத்திறனாளிகள் சட்டப் பாதுகாப்பு இயக்கத்தினர் தெரிவிக்கின்றனர். மாற்றுத்திறனாளிகளின் மீது சிறப்புக் கவனம் செலுத்தப்படு வதாகவும் அதற்கென தனித் துறையை உருவாக்கியுள்ளதாகவும் முதல்அமை ச்சரின்கட்டுப்பாட்டில்துறை உள்ளது என்று கூறுவதும் மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், நல வாழ்வினை உறுதி செய்தல், சம வாய்ப்பினை உறுதி செய்தல், கயமரியாதையுடன் வாழ்வதை உறுதிப்படுத்துதல் போன்ற இலக்குகளுடன் அரசு செயல்படுவதாக கூறுவதும் வெறும் காகிதத்தில் இருந்தால் மட்டும் போதாது. அவைகள் எல்லாம் செயல்பாட்டிற்கு வரவேண்டும். அரசாணைகளை வெளியிட்டால் மட்டும் போதாது, நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்தால்தான் மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும். ஆனால் இவற்றை செய்ய திமுக அரசு தவறிவிட்டதாக மாற்றுத் திறனாளிகளே தெரிவிக்கின்றனர். மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கக்கூட மனமில்லாத கல்நெஞ்ச அரசாக தி.மு.க. அரசு விளங்கிக் கொண்டிருக்கிறது. தி.மு.க அரசின் இந்தச் செயல் கடும் கண்டனத்திற்குரியது. மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தக்கூடிய அரசாணைகளை செயல்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.என தெரிவித்துள்ளார்



# திருச்சி அருகே காவிரி ஆற்றில் குளித்த தந்தை, மகள் பலி

திருச்சி, செப். 18

திருவெறும்பூர் அருகே உள்ள பத்தாளப்பேட்டையை சேர்ந்தவர் சுரேஷ் ( 40 ) இவர் பெல் நிறுவனத்தில் ஊழியராக வேலை பார்த்து வந்தார். மேலும் பத்தாளப்பேட்டையில் பெல் ஊழியர்களால் நடத்தப்படும் டிபார்ட்மெண்ட் ஸ்டோரின் உறுப்பினராக இருந்தார். இந்தநிலையில், நேற்று மதியம் இவரது மகள்களான கிருத்திகா (13) மற்றும் யாஷிகா (6) ஆகிய இருவரையும் அழைத்துக் கொண்டு பத்தாளப்பேட்டை பகுதியில் உள்ள கல்லணை கால்வாய் ஆற்றில் இறங்கி குளிப்பதற்கு சுரேஷ் முயன்றுள்ளார்.



அப்போது கிருத்திகா தண்ணீரில் இறங்காமல் கரையில் அமர்ந்திருந்த நிலையில், யாஷிகா தண்ணீரில் இறங்கியுள்ளார். அப்போது எதிர்பாராதவிதமாக தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்ட யாஷிகாவை காப்பாற்றுவதற்காக சுரேஷ் தண்ணீரில் குதித்துள்ளார். இதில் சுரேஷும் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டார். இதைப் பார்த்த கிருத்திகா கூச்சலிட்டுள்ளார். கூச்சல் சத்தம் கேட்டு ஓடிவந்த பொதுமக்கள் யாஷிகாவை மீட்டு பெல் மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் யாஷிகா ஏற்கெனவே இறந்து விட்டதாக கூறியுள்ளனர்.

இதையடுத்து சுரேஷ் உடலை அப்பகுதி மக்கள் தேடி வருகின்றனர். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த திருவெறும்பூர் போலீசார், யாஷிகா உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக துவாக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். போலீசார் விசாரணை செய்து வருவதோடு சுரேஷின் உடலை மீட்பதற்கு உரிய நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது

# விஷ சாராய வழக்கு: மேலும் 3 பேர் மீது குண்டர் சட்டம் பாய்ந்தது

கள்ளக்குறிச்சி, செப். 18

கள்ளக்குறிச்சி கருணாபுரம், மாதவச்சேரி, சேஷசமுத்திரம் ஆகிய பகுதிகளில் கடந்த ஜூன் மாதம் 19ந்தேதி விஷ சாராயம் குடித்ததில் 229 பேர்பாதிக்கப்பட்டனர். இவர்களில் 68 பேர் உயிரிழந்த நிலையில், 161 பேர் மருத்துவமனைகளில்சிகிச்சைபெற்று வீடு திரும்பினர். இதுதொடர்பாக விழுப்புரம் சி.பி.சி.ஐ.டி. போலீசார் வழக்குப்பதிவு செய்து சாராயம் விற்பனை செய்தது, மெத்தனால் விற்பனை செய்தது தொடர்பாக 24 பேரை கைது செய்து கடலூர் மத்திய சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில் விஷ சாராயம் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களில் ஏற்கனவே 11 பேர் குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்டிருந்தனர். இதையடுத்து மாதவச்சேரியை சேர்ந்த ராமர், கருணாபுரத்தை சேர்ந்த பரமசிவன், முருகேசன் ஆகிய 3 பேரை குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்ய கள்ளக்குறிச்சி மாவட்ட கலெக்டருக்கு சி.பி.சி.ஐ.டி. போலீஸ் சூப்பிரண்டு வினோத் சாந்தாராம், துணை போலீஸ் சூப்பிரண்டு வேல்முருகன் ஆகியோர் பரிந்துரை செய்தனர்.

இதையடுத்து ராமர் உள்பட 3 பேரையும் குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்ய சி.பி.சி.ஐ.டி. போலீசாருக்கு மாவட்ட கலெக்டர் பிரசாந்த் உத்தரவிட்டார். அதனை தொடர்ந்து 3 பேர் மீது குண்டர்சட்டம் பாய்ந்தது. இதற்கான உத்தரவு நகல் கடலூர் மத்திய சிறையில் இருக்கும் அவர்களுக்கு சிறை அலுவலர்கள் மூலம் வழங்கப்பட்டது.

# நெல்லையில் வெள்ளநீர் கால்வாயில் மூழ்கி 3 மாணவர்கள் பலி

நெல்லை, செப். 18

நண்பனின் புதுமனை புகுவிழாவிற்கு சென்ற நிலையில், வெள்ள நீர் கால்வாயில் மூழ்கி பள்ளி மாணவர்கள் 3 பேர் உயிரிழந்துள்ள சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

நெல்லை ஜோதிபுரத்தைச் சேர்ந்த ஜேக்கப் என்பவரது மகன் அருண்குமார் (17), டக்கம்மாள்புரத்தைச் சேர்ந்த வில்லியம்ஸ் என்பவரது மகன் நிகில் (17), கொங்கந்தான் பாறையைச் சேர்ந்த ரமேஷ் என்பவர் மகன் ஆண்ட்ரூஸ் (17) ஆகிய மூன்று பேரும் ஜோதிபுரத்தில் உள்ள தனியார் பள்ளியில் பிளஸ் 2 படித்து வந்தனர். இவர்கள் மூன்று பேரும், இவர்களது நண்பரது புதுமனை புகுவிழா நிகழ்ச்சிக்காக முன்னீர்பள்ளம் அருகே உள்ள வடுகூர்பட்டி என்ற கிராமத்திற்குச் சென்றுள்ளனர். நிகழ்ச்சியில் பங்கேற்ற பிறகு, மாணவர்கள் ஆறு பேரும் இணைந்து நிகழ்ச்சி நடைபெற்ற இடத்தில் இருந்து சுமார் 500 மீட்டர் தொலைவில் உள்ள வெள்ள நீர் கால்வாயில் குளிப்பதற்காகச் சென்றுள்ளனர்.

வெள்ள நீர் கால்வாயில் மாணவர்கள் குளித்து க் கொண்டிருந்த நிலையில், திடீரென ஆண்ட்ரூஸ், அருண்குமார், நிகில் ஆகிய மூன்று பேரும் தண்ணீரில் இழுத்துச் செல்லப்பட்டு மாயமாகியுள்ளனர். இதனைக் கண்ட மற்ற மாணவர்கள் அவர்களைக் காப்பாற்றும் படி கூச்சலிட்டுள்ளனர். தொடர்ந்து, இது குறித்து அவர்களது பெற்றோருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் இச்சம்பவம் குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த பேட்டை, சேரன்மகாதேவி தீயணைப்புத் துறையினர் மற்றும் முன்னீர்பள்ளம் போலீசார், தண்ணீரில் மூழ்கிய ஆண்ட்ரூஸ் மற்றும் அருண்குமார் ஆகிய இரண்டு பேரை சடலமாக மீட்டனர். தொடர்ந்து, சுமார் 3 மணி நேரம் தேடுதலுக்குப் பிறகு நிக்கிலை சடலமாக மீட்டுள்ளனர்.

இதனையடுத்து, இறந்த 3 மாணவர்களின் உடலும் பிரேதப் பரிசோதனைக்காக நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. தொடர்ந்து, இச்சம்பவம் குறித்து முன்னீர் பள்ளம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஒகேனக்கல் அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை

பென்னாகரம், செப். 18

கர்நாடகம் மற்றும் தமிழக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் அவ்வப்போது கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக ஒகேனக்கல்லுக்கு நீர் வரத்து அதிகரிப்பதும், குறைவதுமாக உள்ளது. இந்த நிலையில் மீண்டும் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் கனமழை பெய்ய தொடங்கி உள்ளதால் ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இன்று காலை நிலவரப்படி நீர்வரத்து வினாடிக்கு 18 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது. இதனால் மெயின் அருவி, சினி பால்ஸ், ஐந்தருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுவதுடன், காவிரி ஆற்றில் பாய்ந்து ஓடுகிறது. இதன் காரணமாக ஒகேனக்கல் அருவிகள் மற்றும் ஆற்றங்கரை ஓரங்களில் சுற்றுலா பயணிகள், மக்கள் குளிக்க மாவட்ட கலெக்டர் சாந்தி தடை விதித்துள்ளார்.

நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால் காவிரி ஆற்றில் போலீசார், வருவாய்த்துறையினர், தீயணைப்பு படையினர் மற்றும் ஊர்க்காவல் படையினர் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர். காவிரி ஆற்றில் வரும் நீர்வரத்தை தமிழக கர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். விடுமுறை தினமான இன்று ஒகேனக்கல்லுக்கு வந்த சுற்றுலாபயணிகள் அருவியில் குளிக்க தடை விதிக்கப்பட்டதால் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

# திருவண்ணாமலை அருகே கார், அரசு பஸ் மோதி விபத்து: 2 பேர் பலி

திருவண்ணாமலை, செப். 18

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் அடுத்த பாடியந்தல் கிராமத்தில் வசிப்பவர் ஞானசேகரன் (55). இவர் தனது மனைவி வளர்மதி (52), மருமகள் ஜெயந்தி (22), பேத்தி ரிதன்யா (2) ஆகியோருடன் சேத்துப்பட்டு அடுத்த தேவிகாபுரம் அருகே உள்ள ஊத்தூர் கிராமத்தில், உறவினரின் துக்க நிகழ்ச்சியில் பங்கேற்றுவிட்டு, பாடியந்தல் கிராமத்தில் உள்ள வீட்டுக்கு காரில் இன்று மதியம் திரும்பினர்.

இந்தநிலையில், திருவண்ணாமலை போளூர் தேசிய நெடுஞ்சாலை கலசப்பாக்கம் அடுத்த தென்பள்ளிப்பட்டு கிராமத்தில் வந்தபோது கார் மற்றும் காருக்கு முன்பாக சென்ற பைக் மீது எதிரே வந்த



அரசு பஸ் மோதி, கட்டுப்பாட்டை இழந்து சாலையோரம் இருந்த மரத்தின் மீது மோதி நின்றது. கார் அப்பளம்போல் நொறுங்கி முழுமையாக சேதம் அடைந்தது. அரசு பஸ்சின் முன்பகுதி சேதமடைந்தது. விபத்தில் சிக்கியவர்களின் அலறல் சத்தம் கேட்டு, அப்பகுதி மக்கள் ஓடிசென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

கலசப்பாக்கம் காவல்துறையும் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விபத்தில் சிக்கிய கார் மற்றும் பஸ்சில் இருந்தவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் வளர்மதி மற்றும் கார் ஓட்டுநரான திருக்கோவிலூர் அடுத்த தீம்மச்சூர் கிராமத்தில் வசிக்கும் கோபிநாத் (45) ஆகியோர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர். ஞானசேகரன், ஜெயந்தி, ரிதன்யா ஆகியோர் படுகாயமடைந்தனர். மேலும், காருக்கு முன்பாக இரு சக்கர வாகனத்தில் சென்ற கலசப்பாக்கம் அடுத்த தென்பள்ளிப்பட்டு அருகே உள்ள மேட்டுப்பாளையம் கிராமத்தில் வசிக்கும் வேலு (50) மற்றும் அரசு பஸ்சில் பயணித்த பெண் பயணி ஒருவரும் படுகாயம் அடைந்தனர். இவர்கள் அனைவரும் மீட்கப்பட்டு, திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து குறித்து அரசு பஸ் ஓட்டுநர் லோகநாதன் (50) மீது வழக்குப் பதிவு செய்து கலசப்பாக்கம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பாலியல் புகார் எதிரொலி: ஜனசேனா கட்சியில் இருந்து ஜானி மாஸ்டர் நீக்கம்

ஆனந்த்பூர், செப். 18

தனுஷ் நடிப்பில் வெளியான திருச்சிற்றம்பலம் படத்தில் இடம்பெற்ற 'மேகம் கருக்காதா பெண்ணே' பாடலுக்கு தேசிய விருது பெற்றவர் நடன இயக்குநர் ஜானி. விஜயின் வாரிசு படத்தில் இடம்பெற்ற 'ரஞ்சிதமே', ரஜினியின் காவாலா போன்ற ஹிட் பாடல்களுக்கு நடனம் அமைத்து கொடுத்தவர். இந்நிலையில் பாலியல் வன்கொடுமை செய்ததாக பெண் ஒருவர் கொடுத்த புகாரின் பேரில் நடன இயக்குநர் ஜானி மீது ஆந்திர மாநிலத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.



ஐதராபாத், சென்னை, மும்பை என ஷூட்டிங் சென்ற இடங்களில் ஜானி மாஸ்டர் தன்னை பாலியல் வன்கொடுமை செய்ததாக, ஆந்திர மாநிலத்தில் பெண் திரைப்பட கலைஞர் ஒருவர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இதுதொடர்பாக வழக்குப் பதிவு செய்துள்ள போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் இளம் பெண் அளித்த பாலியல் புகார் எதிரொலியாக ஜனசேனா கட்சியில் இருந்து ஜானி மாஸ்டர் நீக்கப்பட்டுள்ளார். ஜானி மீது ராயதுர்கம் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டதை அடுத்து ஜனசேனா தலைமை இந்த நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுதொடர்பாக ஜனசேனா கட்சி தனது எக்ஸ் வலைதளத்தில், "ஜனசேனா கட்சி நடவடிக்கைகளில் இருந்து விலகி இருக்க ஜானிக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அவர் மீது ராயதுர்கம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டதை அடுத்து, கட்சித் தலைமை இந்த முடிவை எடுத்துள்ளது. இந்த முடிவு உடனடியாக அமலுக்கு வருகிறது" என்று அதில் பதிவிடப்பட்டுள்ளது.

# மதுரவாயலில் அரசு பஸ் மேம்பாலத்தில் இருந்து கவிழ்ந்து விபத்து: ஆட்டோ ஓட்டுநர் பலி




சென்னை, செப். 18

செங்குன்றத்திலிருந்து தாம்பரம் நோக்கி 30க்கும் மேற்பட்ட பயணிகளுடன் சென்று கொண்டிருந்தது 104 வழித்தடது சென்னை மாநகர பஸ். இந்தநிலையில் மதுரவாயல் அருகே சென்று கொண்டிருந்தபோது, திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து பக்கவாட்டில் சாய்ந்து, சர்வீஸ் சாலையில் கவிழ்ந்தது.

அப்போது, சர்வீஸ் சாலையில் ஆட்டோ ஒன்று சென்றுகொண்டிருந்த நிலையில், அதன் மீது விழுந்து ஆட்டோவை அப்பளம் போல் நொறுக்கியது. இதில், ஆட்டோஓட்டுநர்தினேஷ் என்பவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். பஸ் கவிழ்ந்த விபத்தில் 15க்கும் மேற்பட்ட பயணிகள் காயம் அடைந்துள்ளனர். காயமடைந்த பயணிகள் உடனடியாக மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இந்த விபத்து காரணமாக சுமார் 1 மணி நேரத்திற்கும் மேலாக தாம்பரம் மதுரவாயல் சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இந்த விபத்து குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மதுரவாயல் அருகேஅரசுபஸ்கவிழ்ந்து ஒருவர் பலியான சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# தமிழகம் முழுவதும் சுங்கச்சாவடிகளை முற்றுகையிட்டு மனிதநேய மக்கள் கட்சியினர் போராட்டம்

சென்னை, செப். 18

தமிழகம் முழுவதும் சுங்கச்சாவடி கட்டணம் என்ற பெயரில் மத்திய அரசு வழிப்பறி கொள்ளையில் ஈடுபடுவதாக கூறி மனிதநேய மக்கள் கட்சியினர் இன்று போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழகம் முழுவதும் சுங்கச்சாவடிகளை முற்றுகையிட்டு மனிதநேய மக்கள் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.




செங்கல்பட்டு பரனூர் சுங்கச்சாவடியை ஜவாஹிருல்லா தலைமையிலான மனிதநேய மக்கள் கட்சியினர் முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அதேபோல், விக்கிரவாண்டி, மதுரை கப்பலூர் உள்பட பல்வேறு சுங்கச்சாவடிகளில் வாகனங்களை மறித்து மனிதநேய மக்கள் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த போராட்டத்தால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வாகன ஓட்டிகள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

அதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மனிதநேய மக்கள் கட்சியினரை அப்புறப்படுத்தும் முயற்சியில் போலீசார் இறங்கியுள்ளனர்.

# 2026ல் தனித்து போட்டி: என் பாதை, என் பயணம் தனி சீமான் பேட்டி



காரைக்குடி, செப். 18

நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் 2026 சட்டமன்ற தேர்தலிலும் தனித்து போட்டியிடுவதாக அறிவித்து இருக்கிறார். முன்னதாக நடிகரும், தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் தலைவருமான விஜய்யுடன் கூட்டணி அமைப்பது குறித்த கேள்விகளுக்கு நேரடி பதில் அளிப்பதை சீமான் தவிர்த்து வந்த நிலையில், தற்போது 2026ல் தனித்து போட்டியிடுவதாக அறிவித்துள்ளார்.

நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட சீமான் 2026 சட்டமன்ற தேர்தல் கூட்டணி தொடர்பான கேள்விக்கு பதில் அளித்தார். அப்போது. நான் தனித்து போட்டியிடுகிறேன். என்னுடன் சேர வேண்டுமா என்பதை மற்றவர்கள் தான் முடிவு செய்ய வேண்டும். நானாக இவருடன் செல்கிறேன், அவருடன் செல்கிறேன் என்று கூறிக் கொண்டு இருக்க முடியாது. நான் பிரபாகரன் மகன், என் பாதை தனி, என் பயணமும் தனி. என் இலக்கு தனி. எனக்கு ஒரு கனவு இருக்கிறது. என் நாட்டை எப்படி படைக்க வேண்டும் என்று என் முன்னோர்கள் தூக்கி சுமந்த கனவு அது. பூமியின் சொர்க்கமாக என் நாட்டை படைக்க நான் ஆசைப்படுகிறேன். அதற்கு இவரோடு சேரலாம், அவரோடு சேரலாம் என்றில்லை.

"என்னுடன் சேர்ந்தால் நாடும் மக்களும் நன்றாக இருக்கும் என்று நினைத்தால் வாருங்கள். இல்லையெனில் விடுங்கள். ஒரு தலைவனுக்கு முதல் தகுதி, தன் மண்ணையும், மக்களையும் முழுமையாக நேசிக்க வேண்டும். நான் என் மக்களை முழுமையாக நம்புகிறேன், நேசிக்கிறேன். அதனால் நான் தனித்து போட்டியிடுகிறேன் என்று தெரிவித்தார்.

# பல ஆண்களை கல்யாணம் செய்து பண மோசடி: கல்யாண ராணியின் தோழி கைது



கரூர், செப். 18

திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தைச் சேர்ந்தவர் ராஜா (பெயர் மாற்றப்பட்டுள்ளது). 29 வயதான இவர் உடுமலை சாலையில் பேக்கரி மற்றும் கால்நடை தீவன விற்பனை நிலையம் நடத்தி வருகிறார். ராஜாவுக்கு திருமணம் செய்து வைப்பதற்காக பெற்றோர் மற்றும் உறவினர்கள் பெண் தேடி வந்தனர். அப்போது ஆன்லைன் மேட்ரிமோனியல் ஆப் மூலமாக ஈரோடு மாவட்டம் கொடுமுடியை சேர்ந்த சத்யா (30) என்பவர் ராஜாவுக்கு அறிமுகம் ஆகி உள்ளார்.

ராஜா உடன் சத்யா வாட்ஸ்அப் மூலம் பேசி உள்ளார். அப்போது ராஜா விடம் தனது திருமணத்திற்கு வரன் தேடுவதாகவும், தமிழ்ச்செல்வி என்ற இடைத்தரகர் வரன் தேடிக் கொண்டிருப்பதாக சத்யா கூறியிருக்கிறார்.

கையோடு தமிழ்ச்செல்வியையும் ராஜாவுக்கு சத்யா அறிமுகம் செய்து வைத்துள்ளார். சத்யாவும் ராஜாவும் செல்போனில் பேசி வந்த நிலையில் இருவருக்கும் ஒருவரை ஒருவர் பிடித்து போயிருக்கிறது.

இதையடுத்து, சத்யாவும் ராஜாவும் திருமணம் செய்து கொண்டனர். திருமணத்தின் போது சத்யாவுக்கு மாப்பிள்ளை வீட்டார் 12 பவுன் நகைகளை அணிவித்து இருக்கிறார்கள். திருமணத்திற்கு பிறகு சத்யாவின் நடவடிக்கையில், கணவருக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, செல்போனை எடுத்து பார்த்த போது, சத்யா பல ஆண்களுடன் இருக்கும்புகைப்படங்கள் இருந்து இருக்கின்றன. இது பற்றி சத்யாவின் கணவர் ராஜா, கேட்ட போதும் வீட்டில் இருந்து சத்யா திடீரென எஸ்கேப்ஆனார்.

இதையடுத்து தாராபுரம் அனைத்து காவல் நிலையத்தில் ராஜா புகார் செய்தார். இதையடுத்து விசாரணை மேற்கொண்ட போலீசாருக்கு பலதிடுக்கிடும் தகவல் கிடைத்தது. சத்யா சுமார் 50க்கும் மேற்பட்ட ஆண்களை ஏமாற்றி கல்யாணம் செய்து பணம் பறித்தது தெரியவந்தது. சத்யாவின் ஏமாற்று வேலையில் மாடு மேய்ப்பவர் முதல் எஸ்.ஐ வரை சிக்கி தங்களது பணத்தையும் நகைகளையும் பறிகொடுத்ததுதான் மிச்சம்.

இதையடுத்து, சத்யாவை தேடி வந்த போலீசார், புதுவையில் வைத்து கைது செய்தனர். இந்த நிலையில் திருப்பூர் சிறையில் உள்ள சத்யா, தனக்கு ஜாமீன் கோரி சென்னை ஐகோர்ட்டில் மனுதாக்கல் செய்தார். மனுவில் 60 நாட்களுக்கு மேலாக சிறையில் இருக்கும் நிலையில் இன்னமும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவில்லை. எனவே எனக்கு ஜாமீன் வழங்கி உத்தரவிடுமாறு கேட்டுக் கொண்டார். இதையடுத்து, சத்யாவிற்கு சென்னை ஐகோர்ட்டு ஜாமீன் வழங்கியது.

இந்த நிலையில்தான், சத்யாவுக்கு புரோக்கராகவும் தோழியாகவும் இருந்த தமிழ்ச்செல்வி என்பவரை கரூரில் வைத்து போலீசார் கைது செய்துள்ளனர். செல்போன்சிக்னல்மூலம் தமிழ்ச்செல்வியை கைது செய்துள்ளனர். அனைத்து மகளிர் போலீசார் கைது செய்து உடுமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி திருப்பூர் அருகே உள்ள நல்லூர் சிறையில் அடைத்தனர். தமிழ்ச்செல்வியிடம் விசாரணை நடத்தும் பட்சத்தில் மேலும் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகலாம் என போலீசார் தரப்பில் கூறப்படுகிறது.

# சிறப்பு பூஜை நடத்தியும் பயனில்லை: 6 சார் பதிவாளர் அலுவலகங்களில் ரூ.11.93 லட்சம் சிக்கியது




வேலூர், செப். 18

ஆறு சார்பதிவாளர் அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் நேற்று (செப்டம்பர் 16) நடத்திய அதிரடி சோதனையில் மொத்தம் 11 லட்சத்து 93 ஆயிரத்து 310 ரூபாய் சிக்கியுள்ளது.

தமிழ்நாட்டில் 500க்கும் மேற்பட்ட சார் பதிவாளர் அலுவலகங்கள் உள்ள நிலையில், சிலவற்றில் முறைகேடுகளும் மற்றும் அலுவலர்கள் லஞ்சம் வாங்குவதாகவும் தொடர்ந்து புகார்கள் எழுந்தன.

இதனையடுத்து லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகங்களுடன்இணைந்து ஆறு இடங்களில் உள்ள சார் பதிவாளர் அலுவலகங்களில் அதிரடி சோதனை நடத்தினர்.

அதன்படி வேலூர் மாவட்டம் குடியாத்தம் தங்க நகர் பகுதியில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் இடைத்தரகர்களை வைத்து கூடுதலாக பணம் வசூலிப்பதாக வந்த தகவலின் பேரில், 11 பேர் கொண்ட வேலூர் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது கணக்கில் வராத 43 ஆயிரத்து 620 ரூபாய் அலுவலகத்தில் இருந்து கைப்பற்றப்பட்டது.

அதேபோல கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் திருக்கோவிலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் நடத்திய சோதனையில் கணக்கில் வராத 2 லட்சத்து 63 ஆயிரம் ரூபாயை லஞ்ச ஒழிப்பு போலீசார் கைப்பற்றினர். இங்கு தான் சமீபத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனையில் சிக்க கூடாது என்பதற்காக சிறப்பு பூஜை நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் உள்ள சார்பதிவாளர்அலுவலகத்தில்லஞ்சஒழிப்புபோலீஸ் துணை சூப்பிரண்டு கலைச்செல்வன் தலைமையில் நடத்தப்பட்ட சோதனையில் கணக்கில் வராத 2 லட்சத்து 3 ஆயிரத்து 280 ரூபாய் கைப்பற்றப்பட்டது.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சார் பதிவாளர் அலுவலகத்தில் நேற்று மாலை 4 மணி முதல் மாவட்ட லஞ்ச ஒழிப்பு போலீஸ் துணை சூப்பிரண்டு வேல்முருகன் தலைமையில் நடத்தப்பட்ட சோதனையில் கணக்கில் காட்டப்படாத 94 ஆயிரத்து 570 ரூபாயும் கைப்பற்றப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் சார் பதிவாளர் அலுவலகத்தில், மாவட்ட லஞ்ச ஒழிப்பு போலீஸ் துணை சூப்பிரண்டு கலைச்செல்வன் தலைமையில் ஆய்வாளர் கீதா உள்ளிட்டோர் நடத்திய சோதனையில் கணக்கில் காட்டப்படாத 3 லட்சத்து 71 ஆயிரத்து 840 ரூபாயும் கைப்பற்றப்பட்டது.

கடலூர் மாவட்டத்தில் காடாம்புலியூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து கணக்கில் வராத 2 லட்சத்து 17 ஆயிரம் ரூபாயை லஞ்ச ஒழிப்பு போலீசார் பறிமுதல் செய்தனர்.

ஒரேநாளில் அதிரடியாக நடத்தப்பட்ட இந்த சோதனையின் மூலம், 6 சார்பதிவாளர் அலுவலகங்களில் இருந்து மொத்தம் 11,93,310 ரூபாய் கைப்பற்றப்பட்டதாக லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் தெரிவித்துள்ளனர்.

# பாடகர் மனோவின் மகன்கள் மீது கொடூர தாக்குதல் சிசிடிவி காட்சி வெளியானது



சென்னை, செப். 18

நடிகர் மனோவின் மகன்கள் சிறுவன் மீது தாக்குதல் நடத்தியதாக கடந்த சில தினங்களுக்கு முன்பு அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இதுதொடர்பாக சிறுவனை மது போதையில் தாக்கியதாக மனோவின் மகன்கள் ஷகீர், ரப்பீக் மற்றும் வீட்டு பணியாளர்கள் இருவர் உள்பட 4 பேர் மீது வளசரவாக்கம் போலீசார் வழக்குப்பதிவு செய்து, தலைமறைவான மனோவின் மகன்களை தேடி வருகின்றனர்.

இந்நிலையில் மதுபோதையில் வாலிபர் மற்றும் சிறுவனை தாக்கியதாக பாடகர் மனோ மகன்கள் மீது எழுந்த புகார் விவகாரத்தில், இரு தரப்பினரும் மாறி மாறி தாக்கிக் கொள்ளும் சிசிடிவி காட்சி வெளியாகி உள்ளது.

முன்னதாக பாடகர் மனோவின் மகன்கள் மட்டுமே தாக்கியதாக புகார் தெரிவிக்கப்பட்ட நிலையில், தற்போது தாக்குதலுக்கு உள்ளான சிறுவன் உள்ளிட்டவர்கள் தங்களது நண்பர்கள் உள்ளிட்ட 10க்கு ம் மேற்பட்டவர்களுடன் மனோ வீட்டு வாசலில், அவரது மகன்களை கல் மற்றும் கத்தி உள்ளிட்டவற்றால் தாக்கும் காட்சிகள் வெளியாகி உள்ளன. மேலும் கீழே விழுந்த மனோவின் மகன்களை சிறுவனின் கும்பல் கால்களால் எட்டி உதைக்கும் காட்சிகளும் இந்த வீடியோவில் பதிவாகி உள்ளது. இந்த காட்சியை அடிப்படையாகக்கொண்டு பாடகர் மனோ சார்பில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

# அருப்புக்கோட்டை ஒன்றியத்தில் விடப்பட்ட பச்சிளம் குழந்தை: கலெக்டர் தகவல்

விருதுநகர், செப். 18

அருப்புக்கோட்டை ஒன்றியம், பெரியகட்டங்குடி, காலனி தெருவில் வசித்து வந்த தங்கராஜ் மீனாட்சி தம்பதியருக்கு 12.09.2016 அன்று மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் பெண் குழந்தை பிறந்துள்ளது. இப்பச்சிளம் பெண் குழந்தையை 10 நாட்கள் மட்டுமே வளர்த்த நிலையில், அருப்புக்கோட்டை வட்டம், பெரியகட்டங்குடி பகுதியில் வசித்து வந்த தம்பதியர் வசம் ஒப்படைத்துவிட்டு சென்றுவிட்டனர் என அறியப்பட்டது.

இப்பெண் குழந்தை மீட்கப்பட்டு குழந்தைகள் நலக்குழுவின் ஆணைப்படி விருதுநகர் மாவட்டத்தில் உள்ள குழந்தைகள் இல்லத்தில் வளர்ந்து வருகிறார். இச்சிறுமி மீது உரிமை கோரி பெற்றோர் மற்றும் உறவினர்கள் என எவரும் இதுநாள்வரை வரவில்லை என அறியப்பட்டது.

இச்சிறுமியின் பெற்றோர் குறித்த விபரங்கள் அறிய மேற்கண்ட கிராமத்தில் நேரடியாக கள விசாரணை செய்தபோது எவருமில்லை என அறியப்பட்டது.

இச்சிறுமியின் எதிர்காலநலனை கருத்தில் கொண்டு மறுவாழ்வு நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் இச்சிறுமியின் பெற்றோர் அல்லது உறவினர்கள் இச்சிறுமியின்மீது உரிமைகோரி 26.09.2024க்குள் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, 2,8305, வ.உ.சி.நகர், சுலக்கரைமேடு, விருதுநகர் 626003, தொலைபேசி எண். 04562 293946 என்ற முகவரியை தொடர்பு கொள்ளலாம். அவ்வாறு எவரும் வரவில்லை எனில் இச்சிறுமியின் எதிர்கால நலனை கருத்தில்கொண்டு= மாற்றுப்பராமரிப்பு திட்டத்தின்கீழ் ஒப்படைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மாவட்ட கலெக்டர் வீ.ப.ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

## இது போன்ற பிரச்சினையை என்னுடைய 8 வயதிலிருந்தே சந்திக்கிறேன்' நடிகை ஸ்ரத்தா ஸ்ரீநாத்



தமிழ், தெலுங்கு, கன்னடம் உள்ளிட்ட மொழி திரைப்படங்களில் நடித்து முன்னணி நடிகையாக வலம் வருபவர் ஸ்ரத்தா ஸ்ரீநாத். இவர் தமிழில், விக்ரம் வேதா, நேர்கொண்ட பார்வை, மாறா, இறுகப்பற்று உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார்.

இந்நிலையில் ஸ்ரத்தா ஸ்ரீநாத், பாலியல் துன்புறுத்தல்கள் குறித்து பேசியுள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்,

'சினிமாவை விட வெளியில்தான் பாதுகாப்பற்ற சூழ்நிலையை உணர்கிறேன். இது போன்ற பிரச்சினையை நான் என்னுடைய 8 வயதிலிருந்தே சந்திக்கிறேன். அதிர்ஷ்டவசமாக திரைத் துறையில் நான் எந்தவித பாலியல் துன்புறுத்தல்களையும் சந்திக்கவில்லை. ஆனால், மற்றவர்களும் என்னைப்போல எந்த துன்புறுத்தல்களையும் எதிர்கொள்ளவில்லை என்று சொல்ல முடியாது. இதுபோன்ற பிரச்சினைகளைஎதிர்கொள்ளும்போதுஅதையாரிடம்எப்படிசொல்வது என்பது கூட தெரியாது.

ஒருவேளை நீங்கள் அதை காலதாமதமாக கூட சொல்லியிருப்பீர்கள். இது போன்ற பாலியல் துன்புறுத்தல்கள் உள்ளிட்ட விஷயங்களை கண்காணிக்க முறையான கட்டமைப்பு தேவை. சிறிய மாற்றங்கள் கூட நமக்கு உதவிகரமாக இருக்கும். இந்த பிரச்சினைகளுக்கு அனைவரும் ஒன்றிணைந்து குரல் எழுப்ப வேண்டும்.' என்றார்.

## வங்காளதேச டெஸ்ட் தொடரில் அஸ்வின் படைக்க உள்ள மாபெரும் சாதனைகள்




இந்திய கிரிக்கெட் அணி சொந்த மண்ணில் வங்காளதேசத்திற்கு எதிராக 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது. அதன்படி இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி வரும் 19ம் தேதி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற உள்ளது.

இந்த தொடரில் இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளரான அஸ்வின் 3 மாபெரும் சாதனைகள் படைக்க வாய்ப்புள்ளது.

அதன் விவரம் பின்வருமாறு: டெஸ்ட் கிரிக்கெட்டில் வங்காளதேசத்துக்கு எதிராக முன்னாள் ஜாம்பவான் வீரர் ஜாகீர் கான் 31 விக்கெட்டுகள் எடுத்துள்ளார். அதனால் வங்காளதேசத்துக்கு எதிராக டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகள் எடுத்த இந்திய பவுலராகவும் அவர் சாதனை படைத்துள்ளார். அவருக்கு அடுத்தபடியாக ரவிச்சந்திரன் அஸ்வின் 23★ விக்கெட்டுகளுடன் 2வது இடத்தில் உள்ளார். எனவே இந்த தொடரில் 9 விக்கெட்டுகள் எடுக்கும் பட்சத்தில் ஜாகீர் கானை முந்தி வங்காளதேசத்துக்கு எதிராக அதிக விக்கெட்டுகள் எடுத்த இந்திய வீரராக அஸ்வின் வரலாற்று சாதனை

அதே போல 2023 25 உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் தொடரில் இதுவரை அதிக விக்கெட்டுகள் (51★) எடுத்த வீரராக ஆஸ்திரேலியாவின் ஜோஸ் ஹேசல்வுட் முதலிடத்தில் உள்ளார். அவருக்கு அடுத்தபடியாக இந்தியாவின் ரவிச்சந்திரன் 42 விக்கெட்டுகளுடன் 2வது இடத்தில் உள்ளார். எனவே இந்த தொடரில் இன்னும் 10 விக்கெட்டுகள் எடுத்தால் 2023 , 25 டெஸ்ட் சாம்பியன்ஷிப் தொடரில் அதிக விக்கெட்டுகள் எடுத்த வீரராக அஸ்வின் சாதனை படைப்பார். டெஸ்ட் சாம்பியன்ஷிப் வரலாற்றில் அதிக முறை 5 விக்கெட்டுகள் கைப்பற்றிய வீரர்களின் வரிசையில் நாதன் லயனுடன் அஸ்வின் (10 முறை) முதலிடத்தை பகிர்ந்து கொண்டுள்ளார். இந்த தொடரில் ஒரு முறை 5 விக்கெட்டுகளை கைப்பற்றும் பட்சத்தில் டெஸ்ட் சாம்பியன்ஷிப் வரலாற்றில் அதிக முறை 5 விக்கெட்டுகள் கைப்பற்றிய வீரராக சாதனை படைப்பார்.

## நடிகர் சித்தார்த்தை கரம்பிடித்தார் நடிகை அதிதி ராவ்



தென்னிந்திய சினிமாவில் முன்னணி நடிகராக வலம் வருபவர் சித்தார்த். இவரும் பிரபல நடிகை அதிதி ராவும் காதலித்து வருவதாக சினிமா வட்டாரத்தில் கிசுகிசுக்கப்பட்டு வந்தநிலையில், சமீபத்தில் 400 ஆண்டுகள் பழமையான குலதெய்வ கோவிலில் வைத்து தங்களுக்கு நிச்சயதார்த்தம் முடிந்ததாக அறிவித்தனர்.

இதனையடுத்து, இவர்களது திருமணத்தை எதிர்நோக்கி அவர்களது ரசிகர்கள் காத்திருந்தனர். இந்நிலையில், இருவருக்கும் சொந்த பந்தங்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்று முடிந்துள்ளது. இது தொடர்பான புகைப்படங்களை இருவரும் தங்கள் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளனர். அதிதி ராவ், நடிகர் சித்தார்த்தை கரம்பிடித்ததையடுத்து அவர்களுக்கு திரைபிரபலங்கள், ரசிகர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

சித்தார்த்தும் அதிதி ராவும் கடந்த 2021ம் ஆண்டு தமிழ், தெலுங்கில் வெளியான 'மகா சமுத்திரம்' படத்தில் ஒன்றாக நடித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆஸ்திரேலிய அணியை கலாய்த்த பென் ஸ்டோக்ஸ்... காரணம் என்ன..?




ஆஸ்திரேலிய அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட டி20 தொடர் மற்றும் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் டி20 தொடர் நடைபெற்றது.


முதல் டி20 போட்டியில் ஆஸ்திரேலியா 28 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதனையடுத்து நடைபெற்ற 2வது டி20 போட்டியில் இங்கிலாந்து 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதனால் தொடர் 11 என்ற கணக்கில் சமனில் இருந்தது.

இந்நிலையில் இந்த தொடரின் வெற்றியாளரை தீர்மானிக்கும் 3வது மற்றும் கடைசி டி20 போட்டி கடந்த 15ம் தேதி மான்செஸ்டரில் நடைபெற இருந்தது. ஆனால் அங்கு இடைவிடாது மழை பெய்ததான் காரணமாக ஆட்டம் டாஸ் கூட போடப்படாமல் ரத்து செய்யப்பட்டது. இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட டி20 தொடர் 11 என்ற கணக்கில் சமனில் முடிவடைந்தது. இந்நிலையில் இங்கிலாந்து டெஸ்ட் அணியின் கேப்டன் பென் ஸ்டோக்ஸ் ஆஸ்திரேலியாவை கலாய்த்துள்ளார். குறிப்பாக கடைசிப் போட்டியில் மழை வந்ததால் ஆஸ்திரேலியா தப்பித்ததாகவும் இல்லையேல் இங்கிலாந்து வென்றிருக்கும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவர் பதிவிட்டுள்ளது பின்வருமாறு: "மான்செஸ்டரில் மழை. இங்கே ஆஸ்திரேலியா அதிர்ஷ்டம் செய்துள்ளது என்று நினைக்கிறேன்" என பதிவிட்டுள்ளார்.

அதனுடன் மான்செஸ்டர் மைதானம் மழையால் மூடப்பட்டிருக்கும் காட்சிகள் தொலைக்காட்சியில் தெரியும் புகைப்படம் எடுத்து கால் மேல் கால் போட்டுக் கொண்டு சிரிக்கும் எமோஜியுடன் இன்ஸ்டாகிராமில் பதிவிட்டுள்ளார்.

## இந்த நடிகரை திருமணம் செய்ய விரும்பிய திரிப்தி டிம்ரி



பாலிவுட் சினிமாவில் முன்னணி நடிகையாக வலம் வருபவர் திரிப்தி டிம்ரி. கடந்த 2017ம் ஆண்டு வெளிவந்த திரில்லர்படமான'மாம்'திரைப்படத்தின்மூலம்சினிமாவில் அறிமுகமான இவர், அடுத்த ஆண்டு வெளியான 'லைலா மஜ்னு'வில் கதாநாயகியாக அறிமுகமானார்.

சமீபத்தில், ரன்பீர் கபூர், ராஷ்மிகா மந்தனா நடிப்பில் வெளியான 'அனிமல்' படத்தில் நடித்து புகழ் பெற்றார். அதனைத்தொடர்ந்து, விக்கி கவுசல் ஜோடியாக 'பேட் நியூஸ்' படத்தில் நடித்திருந்தார். இப்படம் விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்றது. தற்போது, ராஜ்குமார் ராவுடன் இணைந்து 'விக்கி வித்யா கா வோ வாலா வீடியோ' என்ற திரைப்படத்தில் நடித்திருக்கிறார். இப்படம் அடுத்த மாதம் 11ம் தேதி திரைக்கு வரவுள்ளது.

இந்நிலையில், நடிகை திரிப்தி டிம்ரி தனது முதல் பாலிவுட் கிரஸ் குறித்து வெளிப்படுத்தினார். அவர் கூறுகையில் 'அது ஷாருக்கான். எனக்கு 5 அல்லது 6 வயது இருக்கும். நான் அவரைதிருமணம் செய்து கொள்ளப் போகிறேன் என்று என் குடும்பத்தில் உள்ள அனைவரிடமும் கூறினேன்', என்றார்.

## ஐ.எஸ்.எல் கால்பந்து: முகமைதன் அணியை வீழ்த்தி நார்த்ஈஸ்ட் யுனைடெட் திரில் வெற்றி



13 அணிகள் பங்கேற்றுள்ள 11வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து தொடர் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் கொல்கத்தாவில் நேற்றிரவு நடந்த 5வது லீக் ஆட்டத்தில் முகமைதன் எப்.சி. நார்த்ஈஸ்ட் யுனைடெட் அணிகள் மோதின.

இரு அணிகளும் சம பலத்துடன் மல்லுக்கட்டியதால் ஆட்டம் விறுவிறுப்பாக நடைபெற்றது. இரு அணிகளாலும் வழக்கமான நேரத்தில் கோல் அடிக்க முடியவில்லை. இதனால் ஆட்டம் டிரா ஆகும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் காயம் உள்ளிட்ட நேர விரயத்துக்காக ஒதுக்கப்பட்ட கூடுதல் நேரத்தில் நார்த்ஈஸ்ட் ஒரு கோல் அடித்து திரில் வெற்றியை ருசித்தது. அந்த அணி வீரர் அலாடினே அஜராய் கோல் அடித்து தங்கள் அணி 10 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற காரனமாய் அமைந்தார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.